APPOLO
STUDY CENTRE

# மாதாந்திர நடப்பு நிகழ்வுகள் - செப்டம்பர் 01-30, 2025



| வ.எண். | தலைப்புகள் | பக்க எண். |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு | 3 |
| 2 | தேசிய நிகழ்வுகள் | 10 |
| 3 | திட்டங்கள் | 12 |
| 4 | நீதிமன்ற தீர்ப்புகள் | 13 |
| 5 | இந்தியாவும் இதர நாடுகளும் | 14 |
| 6 | மாநாடுகளும் உச்சி மாநாடுகளும் | 15 |
| 7 | பாதுகாப்பு | 18 |
| 8 | பொருளாதாரம் | 21 |
| 9 | நியமனங்கள் | 22 |
| 10 | விருதுகள் | 25 |
| 11 | புத்தகங்களும் ஆசிரியர்களும் | 29 |
| 12 | அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச் சூழல் | 32 |
| 14 | விளையாட்டுகள் | 36 |
| 15 | அறிக்கைகள் | 39 |
| 16 | தரவரிசைப்பட்டியல் | 41 |
| 17 | முக்கிய தினங்கள் | 42 |
| 18 | த.நா.அ.ப.தேர்வாணைய முந்தைய தேர்வு வினாக்கள் | 44 |


APOLLO STUDY CENTRE

# தமிழ்நாடு

- **மணப்பாறை முறுக்குக்கான புவிசார் குறியீடு வெளியிடப்பட்டது**
- ✓ மணப்பாறை முறுக்குக்கான புவிசார் குறியீட்டு லோகோ செப்டம்பர் 1, திங்கட்கிழமை அன்று தஞ்சாவூரில் வெளியிடப்பட்டது.




- ✓ இந்த அடையாளச் சின்னத்தில் திருச்சி மாவட்டத்தில் உள்ள மணப்பாறையில் அரிசி மாவைப்பயன்படுத்தி கையால் தயாரிக்கப்படும் சிற்றுண்டியான முறுக்கின் படம் இடம் பெற்றுள்ளது.
- ✓ இது உள்நாட்டில் மட்டுமல்லாது, குறிப்பாக தென்கிழக்கு ஆசியா மற்றும் வளைகுடா நாடுகளில் உள்ள தமிழ் புலம்பெயர்ந்தோரிடமிருந்தும் நுகர்வோர் ஆதரவைப் பெற்றுள்ளது.

- **மாநிலத்தின் மூன்றாவது பல்லுயிர் பாரம்பரிய தளம் (Biodiversity Heritage Site)**
- ✓ ஈரோடு மாவட்டத்தில் உள்ள எலத்தூர் ஏரியை மாநிலத்தின் மூன்றாவது பல்லுயிர் பாரம்பரிய தளமாக தமிழ்நாடு அரசு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.



- ✓ 37.42 ஹெக்டேர் பரப்பளவில் அமைந்துள்ள இந்த ஏரி, உயிரியல் பன்முகத்தன்மைச் சட்டம், 2002இன் பிரிவு 37(1)இன்கீழ் தற்போது பாதுகாக்கப்படுகிறது.
- ✓ இது நவம்பர் 2022இல் மதுரை மாவட்டத்தில் அரிட்டாப்பட்டி மற்றும் மார்ச் 2025இல் திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள காசம்பட்டியின் முந்தைய பல்லுயிர் பாரம்பரிய தள பெயரைப் பின்பற்றுகிறது.

- **ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக வளாத்தில் பெரியாரின் உருவப்படம்**
- ✓ வியாழக்கிழமை (செப்டம்பர் 4, 2025) இங்கிலாந்தில் உள்ள ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக வளாகத்தில் மறைந்த சமூக சீர்திருத்தவாதி 'பெரியார்' ஈ.வெ. இராமசாமியின் உருவப்படத்தைத் திறந்து வைத்து, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், அனைத்து நாடுகளும் சமூகத்தின் ஒடுக்கப்பட்ட மற்றும் ஒதுக்கப்பட்ட பிரிவனருக்கான இட ஒதுக்கீட்டுக் கொள்கையை உருவாக்க வேண்டும் என்று அழைப்பு விடுத்தார்.




- ✓ அனைத்து நாடுகளும் ஒடுக்கப்பட்ட மற்றும் ஒதுக்கப்பட்ட மக்களுக்கு ஒரே மாதிரியான இடஒதுக்கீட்டுக் கொள்கையை உருவாக்க வேண்டும்.
- ✓ சமூக உரிமைகளுக்காக பாடுபடும் அமைப்புகள் இதை முன்னெடுக்க வேண்டும்.

- ➢ **ரூ.15,516 கோடி முதலீடு: தமிழக முதலமைச்சர் ஸ்டாலின்**
- ✓ ஜெர்மனி மற்றும் இங்கிலாந்து நாடுகளில் மேற்கொண்ட அதிகாரப்பூர்வ பயணத்தின்போது, ரூ.15,516 கோடி முதலீட்டை ஈர்ப்பதற்காக மொத்தம் 33 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தானதாக தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் திங்கட்கிழமை (செப்டம்பர் 8, 2025) தெரிவித்தார்.




- ✓ ரூ.1,100 கோடி செலவில் செயல்படுத்தப்படும் பல திட்டங்களுக்கான அடிக்கல்லையும் முதலவர் நாட்டினார்.

- ➢ **தாய்வழி இறப்பு விகிதத்தில் (Maternal Mortality Ratio) தமிழ்நாடு மேலும் சரிவைச் சந்தித்துள்ளது**
- ✓ மாதிரி பதிவு முறையின் சமீபத்திய, ‘இந்தியாவின் தாய்வழி இறப்பு குறித்த சிறப்பு வெளியீடு 2021-2023’இன்படி, தமிழ்நாட்டின் தாய்வழி இறப்பு விகிதம் படிப்படியாகக் குறைந்து, மேலும் மூன்று புள்ளிகள் அளவுக்குக் குறைந்துள்ளது.



Improved care

Tamil Nadu's Maternal Mortality Ratio has been on a steady decline

| SRS special bulletin period | Tamil Nadu's Maternal Mortality Ratio (per 1,00,000 live births) | India's MMR |
|---|---|---|
| 2021-2023 | 35 | 88 |
| 2020-2022 | 38 | 88 |
| 2019-2021 | 49 | 93 |
| 2018-2020 | 54 | 97 |
| 2017-2019 | 58 | 103 |

Source : Special Bulletin on Maternal Mortality in India, Sample Registration System (SRS), Office of the Registrar General, India

- ✓ 2020-2022ஆம் ஆண்டில் 1,00,000 நேரடி பிறப்புகளுக்கு 38 ஆக இருந்த தாய்வழி இறப்பு விகிதம், 2021-23ஆம் ஆண்டில் 35 ஆகக் குறைந்தது.
- ✓ இதன்மூலம், கேரளா மற்றும் ஆந்திராவிற்குப் பிறகு, நாட்டிலேயே இரண்டாவது மிகக் குறைந்த தாய்வழி இறப்பு விகிதம் தமிழ்நாட்டில் உள்ளது. அந்த மாநிலங்கள் இரண்டிலும் தாய்வழி இறப்பு விகிதம் 30 ஆக உள்ளது. நாட்டின் தாய்வழி இறப்பு விகிதம் 88 ஆக உள்ளது.

## ➢ குழந்தைகளுக்கான அன்புக்கரங்கள் நிதியுதவித் திட்டம்

- ✓ முன்னாள் முதலமைச்சர் சி.என். அண்ணாதுரையின் பிறந்த நாளான திங்கட்கிழமை (செப்டம்பர் 15, 2025) தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், பெற்றோர் இருவரையும் இழந்த அல்லது ஒரு பெற்றோரை இழந்த குழந்தைகளின் 18 வயது வரை கல்விக்கு நிதியுதவி செய்யும் ‘அன்புக்கரங்கள்’ திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.




- ✓ இந்தத் திட்டத்தின்மூலம், இந்தக் குழந்தைகள் ஒவ்வொருவருக்கும் பள்ளிக்கல்வியை முடிக்கும்வரை மாதந்தோறும் ரூ.2000 உதவித் தொகை வழங்கப்படும்.
- ✓ இந்த முயற்சியானது, வறுமையில் வாடும் மக்களின் வாழ்வாதாரத்தை அடையாளம் கண்டு உதவுவதை நோக்கமாகக் கொண்ட தமிழ்நாடு அரசின் ‘தாயுமானவர்’ திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

## ➢ தமிழ்நாட்டின் இருவாட்சி பாதுகாப்பு மையம்

- ✓ வால்பாறை பீடபூமியில் உள்ள அட்டகட்டியை இந்தியாவின் முதல் இருவாட்சி பாதுகாப்பு மையத்தை நிறுவுவதற்காக தமிழ்நாடு வனத்துறை தேர்வு செய்துள்ளது.




- ✓ பொள்ளாச்சி – வால்பாறை சாலையில் உள்ள அட்டகட்டியில் உள்ள வனத்துறை வளாகத்தில் இந்த மையம் அமைக்கப்படும். இங்கு மேம்பட்ட வனவிலங்கு மேலாண்மை பயிற்சி மையம் மற்றும் ஆர்க்கிடேரியம் உள்ளன.
- ✓ ஆனைமலை புலிகள் காப்பகத்தில், பொள்ளாச்சி பிரிவில் அமைந்துள்ள இந்த மையம், பிரபலமான சுற்றுலாத்தளமான ஹார்ன்பில் வியூ பாயிண்டிற்கும் அருகில் இருக்கும்.

- **வேலு நாச்சியார் சிலை**
  - காந்தி மண்டப வளாகத்தில் ராணி வேலு நாச்சியாரின் சிலையை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வியாழக்கிழமை அன்று திறந்து வைத்தார்.



  - இந்த சிலையானது, தகவல் மற்றும் விளம்பரத் துறையால் ரூ.50 இலட்சம் செலவி அமைக்கப்பட்டுள்ளது.
  - 2024-25ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின்போது, இந்த சிலை நிறுவப்படும் விவரத்தை அமைச்சர் எம்.பி. சாமிநாதன் அறிவித்தார்.

- **காவலர் பயிற்சிப் பள்ளிக்கு 'வீரமங்கை' வேலு நாச்சியார் பெயர் வைக்கப்படும்**
  - வேலூரில் உள்ள காவலர் பயிற்சிப் பள்ளிக்கு சுதந்திரப் போராட்ட வீராங்கனை 'வீரமங்கை' வேலு நாச்சியார் பெயர் சூட்டப்படும்.



  - சென்னை காந்தி மண்டப வளாகத்தில் சுதந்திரப் போராட்ட வீராங்கனையின் சிலையை முதலமைச்சர் திறந்து வைத்து மலர் அஞ்சலி செலுத்தினார்.
  - சிறப்புமிக்கவர்களை கௌரவிப்பதில் தி.மு.க. அரசு மேற்கொண்ட முயற்சிகளை நினைவுகூர்ந்த, திரு. ஸ்டாலின், 2023ஆம் ஆண்டு குடியரசு தின அணிவகுப்புக்கான அரசின் அலங்கார ஊர்தியில் வேலு நாச்சியாரின் சிலை இடம்பெற்றிருந்ததை சுட்டிக்காட்டினார்.

- **மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்கும் முதல் மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது**
  - மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்கும் முதல் மாநிலமாக தமிழ்நாடு மாறியுள்ளது. துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இந்த விநியோகத்தைத் தொடங்கி வைத்து, சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.3500 கோடி கடன்களை அறிவித்தார்.




- ✓ மாநிலத்தில் ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட சுய உதவிக்குழுக்கள் செயல்படுகின்றன. மேலும், அடையாள அட்டைகள், 100 கிமீ வரை இலவச பேருந்து பயணம் மற்றும் அரசு விற்பனை நிலையங்களில் தள்ளுபடி போன்ற சலுகைகளைப் பெற்றுத் தருகின்றன.
- ✓ இந்த முயற்சியானது, பெண்களுக்கு அதிகாரமளிப்பதையும், மகளிர் உரிமைத் தொகை போன்ற அரசுத் திட்டங்களை அணுகுவதை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ➢ பூம்புகாரில் ஆழ்கடல் ஆய்வு

- ✓ தமிழ்நாடு மாநில தொல்லியல் துறையானது, பூம்புகார் கடற்கரையில் நீருக்கடியில் தொல்பொருள் ஆய்வுகளைத் தொடங்கியுள்ளது.



- ✓ இரண்டு தசாப்தங்களுக்கும் மேலான இடைவெளிக்குப் பிறகு, செப்டம்பர் 19, 2025 அன்று இந்த ஆய்வு தொடங்கியது.
- ✓ இந்தத் திட்டம் இந்திய கடல்சார் பல்கலைக்கழகத்துடன் இணைந்து மேற்கொள்ளப்படுகிறது.
- ✓ காவேரிப்பூம்பட்டினம் என்றும் அழைக்கப்படும் பூம்புகார், மயிலாடுதுறை மாவட்டத்தில் அமைந்துள்ளது.

## ➢ கிழக்கு கடற்கரையில் உலகத்தரம் வாய்ந்த கப்பல் கட்டும் தளம்

- ✓ இந்தியாவின் கிழக்கு கடற்கரையில் உலகத்தரம் வாய்ந்த பசுமைக் கப்பல் கட்டும் தளத்தை உருவாக்குவதற்காக மசகான் டாக் ஷிப் பில்டர்ஸ் லிமிடெட் என்ற நிறுவனம், ‘வழிகாட்டுதல் தமிழ்நாடு’ அமைப்புடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.




- ✓ அரசின் கடல்சார் அம்ரித் கால் தொலைநோக்கு 2047 திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த முயற்சியானது, கப்பல் கட்டும் திறன்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ✓ துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சகம் தலைமையிலான விழாவில் செப்டம்பர் 19, 2025 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இதில் மத்திய அமைச்சர் சர்பானந்த சோனோவால் கலந்து கொண்டார்.

➢ **பாக் விரிகுடாவில் உள்ள இந்தியாவின் முதல் டுகாங் காப்பகம் உலகளாவிய அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது**

- ✓ வனவிலங்கு பாதுகாப்புச் சட்டம், 1972ன்கீழ்:. செப்டம்பர் 21, 2022 அன்று தமிழ்நாடு அரசால் நிறுவப்பட்ட டுகாங் காப்பகம், வடக்கு பாக் விரிகுடாவில் 4488.34 சதுர கி.மீ பரப்பளவைக் கொண்டுள்ளது.




- ✓ சர்வதேச இயற்கை பாதுகாப்பு ஒன்றியம், பாக் விரிகுடாவில் இந்தியாவின் முதல் டுகாங் காப்பகத்தை அங்கீகரிப்பதற்கான ஒரு தீர்மானத்தை முறையாக ஏற்றுக் கொண்டுள்ளது. இது நாட்டின் கடல் பாதுகாப்பு முயற்சிகளுக்கு ஒரு பெரிய சர்வதேச அங்கீகாரத்தைக் குறிக்கிறது.

➢ **தமிழ்நாடு கடலோர மறுசீரமைப்பு இயக்கம்**

- ✓ 2025ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தமிழ்நாடு கடலோர மறுசீரமைப்பு இயக்கம் (The Tamil Nadu Coastal Restoration Mission), தமிழ்நாட்டின் கடலோர மீள்தன்மையை மேம்படுத்துவதற்காக உலக வங்கியால் நிதியளிக்கப்பட்ட ஒரு முக்கிய முயற்சியாகும்.



- ✓ இந்தத் திட்டம் சதுப்புநில மறுசீரமைப்பு, பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் நிலையான கடலோர பொருளாதார மேம்பாடு ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.
- ✓ இது 30,000 ஹெக்டேர் நிலப்பரப்பை மீட்டெடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ✓ தமிழ்நாடு கடலோர மறுசீரமைப்பு இயக்கம் என்பது 1,675 கோடி மதிப்புடைய திட்டமாகும்.
- ✓ உலக வங்கி சுமார் ரூ.1,000 கோடியை வழங்குகிறது. மீதமுள்ள தொகையை தமிழ்நாடு அரசு வழங்குகிறது.

➢ **கன்னியாகுமரி நன்னாரிக்கு புவிசார் குறியீடு கோரப்பட்டுள்ளது**

- ✓ கன்னியாகுமரி மாவட்டத்தின் பசுமையான நிலப்பரப்புகளில் நன்னாரி வளர்கிறது. இது உள்ளூர் சமூகங்களால் தலைமுறை தலைமுறையாக பொக்கிஷமாகப் போற்றப்படும் ஒரு மூலிகை ஆகும். அது, அதன் குளிர்ச்சியூட்டும் பண்புகளுக்குப் பெயர் பெற்றது மற்றும் வாய் புண்களுக்கு ஒரு பாரம்பரிய மருந்தாகப் போற்றப்படுகிறது.




- ✓ தற்போது, தமிழ்நாடு மலைவாழ் மக்கள் சங்கம், குலசேகரம், தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கவுன்சிலின் காப்புரிமை தகவல் மையத்துடன் இணைந்து, கன்னியாகுமரி நன்னாரியின் அடையாளத்தைப் பாதுகாப்பதற்காகவும், அதன் தனித்துவமான பிராந்திய மதிப்பை மேம்படுத்துவதற்காகவும் புவியியல் குறியீட்டைக் கோரியுள்ளது.

APOLLO STUDY CENTRE

# தேசிய நிகழ்வுகள்

- **2023-24ஆம் ஆண்டில் இந்தியாவின் எழுத்தறிவு விகிதம் 80.9 விழுக்காடாக உயர்ந்துள்ளது**

✓ 2011ஆம் ஆண்டில் 74 விழுக்காடாக இருந்த இந்தியாவின் எழுத்தறிவு விகிதம் 2023-24ஆம் ஆண்டில் 80.9 விழுக்காடாக உயர்ந்துள்ளது என்று மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் 2025 சர்வதேச எழுத்தறிவு தினத்தில் அறிவித்தார்.




✓ இமாச்சலப் பிரதேசம், திரிபுரா, மிசோரம், கோவா மற்றும் லடாக் யூனியன் பிரதேசம் போன்ற மாநிலங்கள் முழு எழுத்தறிவை அடைந்துள்ளன.

✓ 'டிஜிட்டல் சகாப்தத்தில் எழுத்தறிவை ஊக்குவித்தல்' என்ற கருப்பொருளானது, இந்தியா முழுவதும் எழுத்தறிவு மற்றும் கற்றலை விரிவுபடுத்துவதில் டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் பங்களிப்பை எடுத்துக்காட்டுகிறது.

- **இந்தியா 250 ஜிகாவாட் புதைபடிவமற்ற எரிபொருள் மின்திறனை எட்டியுள்ளது**

✓ இந்தியா புதைபடிவமற்ற எரிபொருள் மின்திறனில் 250 ஜிகாவாட் என்ற குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியுள்ளது. மேலும், 2030ஆம் ஆண்டுக்குள் 500 ஜிகாவாட் புதுப்பிக்கத்தக்க ஆற்றலை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.





✓ புதுதில்லியில் நடைபெற்ற புதுப்பிக்கத்தக்க எரிசக்தி குறித்த மாநில மதிப்பாய்வுக் கூட்டத்தில் பேசிய அவர், பிரதமர் நரேந்திர மோடியின் முதன்மை முயற்சிகளான தூய்மை இந்தியா மற்றும் தூய்மை எரிசக்தி ஆகியவற்றை நிலையான வளர்ச்சிக்கான முக்கிய இயக்கிகளாக எடுத்துக்காட்டினார்.

✓ அரசின் பயன்பாட்டு அடிப்படையிலான மாதிரியின்கீழ், நாடு முழுவதும் 1 கோடி வீடுகளை இலக்காகக் கொண்டு 20 இலட்சம் வீடுகள் இலவச நிலையான மின்சாரத்தைப் பெற்றுள்ளன.

- **2025ஆம் ஆண்டில் கல்வியறிவில் இந்தியா ஒரு முக்கிய மைல்கல்லை எட்டியுள்ளது**

✓ உல்லாஸ் -நவ பாரத் சாக்ஷார்த்த காரியக்ரமால் (ULLAS-Nav Bharat Saaksharta Karyakram) இயக்கப்பட்டு, இந்தியா அதன் தேசிய கல்வியறிவு எழுத்தறிவு விகிதம் 2011இல் 74 விழுக்காட்டிலிருந்து 2023-24இல் 13 ஆண்டுகளில் 80.9 விழுக்காடாக உயர்ந்துள்ளதன் மூம் ஒரு குறிப்பிடத்தக்க கல்வியறிவு மைல்கல்லை எட்டியுள்ளது.




✓ டிஜிட்டல் சகாப்தத்தில் எழுத்தறிவை ஊக்குவித்தல் என்ற கருப்பொருளில் கல்வி அமைச்சகம் சர்வதேச எழுத்தறிவு தினத்தைக் கொண்டாடியது.

✓ முழு செயல்பாட்டுக் கல்வியறிவு கொண்ட மாநிலம் அல்லது யூனியன் பிரதேசமாக இமாச்சலப் பிரதேசம் விளங்குகிறது. இது திரிபுரா, மிசோரம், கோவா மற்றும் லடாக்குக்கு அடுத்த இடத்தைப் பிடித்துள்ளது.

✓ சுதந்திரத்திற்குப் பிறகு இந்தியாவின் கல்வியறிவு விகிதம் வெறும் 12 விழுக்காடு மட்டுமே. அப்போது இமாச்சலப் பிரதேசத்தில் கல்வியறிவு 7 விழுக்காடாக இருந்தது. 78 ஆண்டுகளுக்குப் பிறகு, அடுத்த மக்கள் தொகை கணக்கெடுப்பின்போது, இந்தியா அனைவருக்கும் கல்வியறிவு என்ற இலக்கைக் கொண்டுள்ளது.

- **இந்தியா 250 ஜிகாவாட் புதைபடிவமற்ற எரிபொருள் சக்தியை எட்டியுள்ளது**

✓ ஒன்றிய அமைச்சர் பிரகலாத் ஜோஷி, புதைபடிவ எரிபொருள் அல்லாத மூலங்களிலிருந்து இந்தியா 250 ஜிகாவாட் மின்சார உற்பத்தியை வெற்றிகரமாக எட்டியுள்ளதாக அறிவித்தார்.




✓ இதில் சூரிய சக்தி, காற்றாலை, நீர்மின்சாரம், உயிரி மின்சாரம் மற்றும் அணுசக்தி ஆகியவை அடங்கும். செப்டம்பர் 11, 2025 அன்று புதுதில்லியில் நடைபெற்ற புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மறு ஆய்வுக் கூட்டத்தில் வெளிப்படுத்தப்பட்ட இந்த மைல்கல், தூய்மையான எரிசக்தியில் உலகத் தலைவர்களின் வரிசையில் இந்தியாவை நிலைநிறுத்துகிறது.

✓ இந்தச் சாதனையானது, பாரிஸ் ஒப்பந்தத்தின்கீழ் உறுதியளிக்கப்பட்டவாறு, 2030ஆம் ஆண்டுக்குள் 500 ஜிகாவாட் புதுப்பிக்கத்தக்க திறன் என்ற இலக்கை நெருங்கச் செய்கிறது.

# திட்டங்கள்

- **ஆதரவற்ற குழந்தைகளுக்கான ‘அன்புக் கரங்கள்’ திட்டம்**

✓ தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், 18 வயது வரை அல்லது பள்ளிப்படிப்பை முடிக்கும் வரை, அதரவில்லாத குழந்தைகளுக்கு மாதாந்திர உதவித் தொகையாக ரூ.2000 வழங்கும் ‘அன்புக் கரங்கள்’ திட்டத்தைத் தொடங்கி வைத்தார். இது அவர்களின் கல்வி மற்றும் நல்வாழ்வைப் பாதுகாக்கும் நோக்கத்தைக் கொண்டுள்ளது.




✓ இதன் முதல் கட்டத்தில், 6082 குழந்தைகள் பயனடைவார்கள். மேலும் பெற்றோரை இழந்து கல்லூரி சேர்க்கை பெற்ற 1,340 மாணவர்களுக்கு மடிக்கணினிகளும் விநியோகிக்கப்பட்டன.

✓ சிறார் நீதிச் சட்டத்தின்கீழ் வரும் இந்தத் திட்டத்தில் விண்ணப்பங்கள் மற்றும் கண்காணிப்புக்கான செயலியும் இதில் இடங்கும்.

APOLLO STUDY CENTRE

# நீதிமன்றத் தீர்ப்புகள்

- **தமிழக அரசின் புதிய மினி பஸ் திட்டத்தை சென்னை உயர் நீதிமன்றம் உறுதி செய்துள்ளது**

- ✓ மாநிலம் முழுவதும் 25,708 கிமீ தூரத்தை உள்ளடக்கிய தனியார் மினிபஸ் ஆபரேட்டர்களுக்கு அனுமதி வழங்குவதற்காகவும், 'சுதந்திரம் அடைந்து 78 ஆண்டுகளுக்குப் பிறகும் பேருந்து இயந்திரத்தின் சப்தத்தையோ அல்லது டீசல் வாசனையையோ கேட்காத' தொலைதூர குக்கிராமங்களைச் சென்றடைவதன்மூலம், கடைசி மைல் இணைப்பை உறுதிசெய்வதற்காகவும் ஆகஸ்ட் 24, 2025 அன்று உருவாக்கப்பட்ட புதிய விரிவான மினிபஸ் திட்டத்தின் செல்லுபடியை சென்னை உயர்நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.



- ✓ நீதியரசர் என். மாலா, அரசாணையை எதிர்த்துத் தொடரப்பட்ட வழக்குகளை தள்ளுபடி செய்தார். 'தொலைதூரப் பகுதிகளைச் சேர்ந்த கிராமவாசிகள் மினிபஸ் சேவைகளைப் பயன்படுத்தி அருகிலுள்ள நகரம் அல்லது ஊரைச் சென்றடைவதை உறுதி செய்வதற்காக இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது' என்று அவர் கூறினார்.

# இந்தியாவும் இதர நாடுகளும்

➢ **காலநிலை நடவடிக்கைக்காக இந்தியா-ஜப்பான் கூட்டு கடன் வழிமுறை**

✓ கார்பன் வர்த்தகத்தை வலுப்படுத்தவும், பசுமை முதலீடுகளை ஊக்குவிக்கவும், நிலையான கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கவும், பாரிஸ் ஒப்பந்தத்தின் பிரிவு 6.2 இன்கீழ் இந்தியாவும் ஜப்பானும் ஒரு முக்கிய கூட்டு கடன் பொறிமுறையில் (Joint Credit Mechanism) கையெழுத்திட்டுள்ளன.



✓ இந்திய ஏற்றுமதிகள் மீதான அமெரிக்க வரிகள் அதிகரித்து வருவதற்கும், சீனாவின் அரிய பூமி கட்டுப்பாடுகளுக்கும் இடையில் இந்த கூட்டு கடன்பொறிமுறையானது இருதரப்பு காலநிலை ஒத்துழைப்பை மேம்படுத்துகிறது.

✓ இது செயற்கை நுண்ணறிவு, பாதுகாப்பு, குறைக்கடத்திகள் மற்றும் முக்கியமான கனிமங்களில் ¥10 டிரில்லியன் (6 டிரில்லியன் ரூபாய்) மதிப்புள்ள பரந்த இந்தியா – ஜப்பான் ஒப்பந்தங்களுடன் ஒத்துப் போகிறது.

# மாநாடுகளும் உச்சி மாநாடுகளும்

➢ **தமிழ்நாடு ரைசிங் உச்சி மாநாடு**

✓ இந்த வாரம் ஓசூரில் நடைபெறும் இரண்டாவது தமிழ்நாடு ரைசிங் உச்சி மாநாட்டில் தமிழ்நாடு புதிய முதலீட்டு ஒப்பந்தங்களில் கையெழுத்திட உள்ளது. 'இந்த உச்சி மாநாடு 40க்கும் மேற்பட்ட முதலீட்டு ஒப்பந்தங்களைக் கொண்டு வரும்.'




✓ 'பொறியியல் மற்றும் மின்னணுவியல், குறிப்பாக கூறு உற்பத்தி, ஆட்டோ மற்றும் மின்சார வாகன உற்பத்தி, விண்வெளி மற்றும் பாதுகாப்பு, உணவு பதப்படுத்துதல் மற்றும் தொழில்துறை பூங்காக்கள் போன்ற துறைகளில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களைத் தமிழக மக்கள் எதிர்பார்க்கலாம்' என்று தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, தி இந்து பத்திரிகையிடம் தெரிவித்தார்.

✓ உலகளாவிய திறன் மையங்கள் மற்றும் ஆராய்ச்சி மேம்பாட்டு மையங்களை ஈர்க்கும் வகையில், சென்னையின் பழைய மகாபாலிபுரம் சாலை மாதிரியில் ஓசூர் அறிவு வழித்தடம் திட்டமிடப்பட்டுள்ளது.

➢ **சர்வதேச விண்வெளி மாநாடு 2025**

✓ டாக்டர். ஜிதேந்திர சிங் சர்வதேச விண்வெளி மாநாட்டை தொடங்கி வைத்தார்.

✓ 'உலகளாவிய முன்னேற்றத்திற்கான இடத்தைப் பயன்படுத்துதல்: புதுமை, கொள்கை மற்றும் வளர்ச்சி' என்ற கருப்பொருளில் சர்வதேச விண்வெளி மாநாடு 2025 நடைபெறும்.




✓ 2035ஆம் ஆண்டுக்குள் பாரதிய விண்வெளி நிலையத்தை அமைத்தல் மற்றும் 2040ஆம் ஆண்டுக்குள் சந்திரனில் ஒரு விண்வெளி வீரரைத் தரையிறக்குதல் உள்ளிட்ட, இந்தியாவின் இலட்சிய இலக்குகளை அமைச்சர் அறிவித்தார்.

✓ சந்தரயான்-3 இன் வெற்றி, சந்திரனின் தென் துருவத்திற்கு அருகில் தரையிறங்கிய முதல் நாடாக இந்தியாவை மாற்றியது, இதில் சிறப்பிக்கப்பட்டது.

➢ **கடலோர காவல்படை உச்சி மாநாடு (Coast Guard Global Summit)**

- ✓ இத்தாலியின் ரோமில் செப்டம்பர் 11 முதல் 12, 2025 வரை நடைபெற்ற 4வது கடலோர காவல்படை உலகளாவிய உச்சி மாநாட்டில் இந்தியா பங்கேற்றது.



- ✓ சர்வதேச கடல்சார் ஒத்துழைப்பில் தனது பங்கை வலுப்படுத்துவதற்கு இந்தியா இந்த உச்சி மாநாட்டை ஒரு தளமாகப் பயன்படுத்தியது.
- ✓ 5வது கடலோர காவல்படை உலகளாவிய உச்சி மாநாட்டின் தலைமைப் பதவிக்கு ஏலம் எடுக்கும் திட்டத்தையும் இந்தியா அறிவித்தது.
- ✓ ஐந்தாவது கடலோர காவல் படை உலகளாவிய உச்சி மாநாட்டை 2027ஆம் ஆண்டில் சென்னை நடத்தும். ஏனெனில் இந்த நிகழ்வை நடத்துவதற்கான முயற்சியில் இந்தியா வெற்றி பெற்றுள்ளது.
- ✓ ரோம் உச்சி மாநாடு 115 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளை ஒன்றிணைத்தது.

## ➢ உலக உணவு இந்தியா (World Food India)

- ✓ உணவு பதப்படுத்தும் துறையில் முதலீடுகளை அதிகரிக்கும் மற்றும் இந்தியாவின் வளமான உணவு கலாச்சாரத்தை உலகளவில் வெளிப்படுத்தும் நோக்கில் செப்டம்பர் 25-28 வரை புதுதில்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் உலக உணவு இந்தியா 2025 திட்டமிடப்பட்டுள்ளது.




- ✓ கூட்டாளி நாடுகளான நியூசிலாந்து மற்றும் சவூதி அரேபியா, கவனம் செலுத்தும் நாடுகளான ரஷ்யா, ஐக்கிய அரபு அமீரகம், ஜப்பான் மற்றும வியட்நாம் உள்ளிட்ட நாடுகளுடன் இந்த நிகழ்வில் 1700க்கும் மேற்பட்ட கண்காட்சியாளர்கள், 500க்கும் மேற்பட்ட சர்வதேச வாங்குபவர்கள் மற்றும் 100க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த பங்கேற்பாளர்கள் இதில் கலந்து கொள்வார்கள். இது உலகின் உணவு கூடையாக இந்தியாவின் பங்கை வலுப்படுத்துகிறது.

## ➢ தமிழ்நாடு உலகளாவிய புத்தொழில் உச்சி மாநாடு (Tamil Nadu Global Startup Summit) 2025

- ✓ தொழில்முனைவோர் மற்றும் முதலீட்டாளர்களுக்கான நாட்டின் மிகப்பெரிய தளங்களில் ஒன்றாகக் கருதப்படும், தமிழ்நாடு உலகளாவிய புத்தொழில் உச்சி மாநாடு 2025இன் தொடக்க விழாவை கோவை நடத்தவுள்ளது.




- ✓ புத்தொழில் தமிழ்நாடு நிறுவனத்தில் முதன்மை முயற்சியான இந்த இரண்டு நாள் உச்சி மாநாட்டை அக்டோபர் 9ஆம் தேதி முதமைச்சர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைப்பார்.
- ✓ கோயம்புத்தூரில் உள்ள கொடிசியா வர்த்தக கண்காட்சி வளாகத்தில் நடைபெறும் இந்த உச்சி மாநாட்டில் சுமார் 35 நாடுகள் பங்கேற்கின்றன.

## ➢ உலக கடல் உணவு மாநாடு (World Seafood Congress) 2026

- ✓ சென்னையில் உலக கடல் உணவு மாநாடு 2026ஐ இந்தியா நடத்த உள்ளது.




- ✓ நமது நாட்டில் இந்த நிகழ்வு நடைபெறுவது இதுவே முதல் முறையாகும்.
- ✓ உலக கடல் உணவு மாநாடு என்பது கடல் உணவு வர்த்தகம், பாதுகாப்பு, நிலைத்தன்மை மற்றும் புதுமை ஆகியவற்றில் கவனம் செலுத்தும் ஒரு முக்கிய உலகளாவிய தளமாகும்.
- ✓ 2026 மாநாட்டை மீன்வளத்துறை மற்றும் சர்வதேச மீன் ஆய்வாளர்கள் சங்கம் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்கின்றன.

# பாதுகாப்பு

## ➢ யூத் அபியாஸ் (Yudh Abhyas)

✓ இந்திய இராணுவத்தின் ஒரு குழு, அலாஸ்காவின் ஃபோர்ட் வைன்ரைட்டிற்கு, வருடாந்திர இந்தியா-அமெரிக்க கூட்டு இராணுவப் பயிற்சியின் 21வது பதிப்பான யூத் அபியாஸ் 2025 (செப்டம்பர் 1-14) இல் பங்கேற்பதற்காக புறப்பட்டது.




✓ இந்தப் பயிற்சியானது, ஒன்றுக்கொன்று செயல்படும் தன்மை, ஆர்க்டிக் மற்றும் மலைப்போர், ஹெலிபோர்ன் செயல்பாடுகள், UAS மற்றும் போர் மருத்துவ உதவி ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.

✓ அலாஸ்காவின் தீவிர நிலப்பரப்பில் நடைபெறும் இந்தப் பயிற்சியானது, மூலோபாய பாதுகாப்பு உறவுகளை ஆழப்படுத்துதல் மற்றும் எதிர்கால கூட்டணி நடவடிக்கைகளை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

## ➢ MAITREE-XIV பயிற்சி

✓ இந்தியா-தாய்லாந்து கூட்டு இராணுவப் பயிற்சியின் 14வது பதிப்பாகிய MAITREE-XIV செப்டம்பர் 1, 2025 அன்று மேகாலயாவின் உம்ரோயில் உள்ள கூட்டு பயிற்சி முனையில் தொடங்கியது.




✓ செப்டம்பர் 14ஆம் தேதி வரை நடைபெறும் இந்த இருதரப்புப் பயிற்சியானது, இந்திய இராணுவத்திற்கும் ராயல் தாய் இராணுவத்திற்கும் இடையிலான ஒத்துழைப்பு, இயங்குதன்மை மற்றும் பரஸ்பர புரிதலை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ➢ ZAPAD 2025 பயிற்சி

✓ செப்டம்பர் 10-16 வரை முலினோ பயிற்சி மைதானத்தில் திட்டமிடப்பட்டுள்ள பலதரப்புப் பயிற்சியான ZAPAD 2025 இல் பங்கேற்பதற்காக 65 பேர் கொண்ட இந்திய ஆயுதப்படை குழு ரஷ்யாவிற்குப் புறப்பட்டது.




- ✓ குமாவோன் படைப்பிரிவின் ஒரு பட்டாலியனால் வழிநடத்தப்படும் இந்தக் குழுவில், இராணுவம் (57), விமானப்படை (7) மற்றும் கடற்படை (1) ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த பணியாளர்கள் உள்ளனர்.
- ✓ வழக்கமான போர் மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு ஆகியபற்றில் இராணுவ ஒத்துழைப்பு, இயங்குதன்மை மற்றும் கூட்டுத் திறன்களை அதிகரிப்பதே இந்தப் பயிற்சியின் நோக்கமாகும்.

➢ **பசிபிக் ரீச் பயிற்சி**

- ✓ இந்தியாவின் சமீபத்திய, உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட டைவிங் ஆதரவு கப்பல் (Diving Support Vessel), செப்டம்பர் 15ஆம் தேதி தொடங்கும் பன்னாட்டுப் பயிற்சியாகிய பிசிபிக் ரீச் 2025இல் பங்கேற்பதற்காக சிங்கப்பூரின் சாங்கி கடற்படைத் தளத்தில் தனது முதல் துறைமுக வருகையை மேற்கொண்டது.




- ✓ 80 விழுக்காட்டிற்கும் அதிகமாக உள்நாட்டுமயமாக்கப்பட்ட இந்தக் கப்பல், கடற்படை தொழில்நுட்பத்தில் இந்தியாவின் ஆத்மநிர்பர்தாவை வெளிப்படுத்தும் ஆழமான நீரில் மூழ்கும் மீட்பு வாகனம் (Deep Submergence Rescue Vehicle)க்கு தாய் கப்பலாக செயல்படும்.
- ✓ இந்தப் பயிற்சியில் 40க்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்கின்றன.

➢ **ரயில் அடிப்படையிலா ஏவுகணையிலிருந்து அக்னி-பிரைம் ஏவுகணை (Agni-Prime Missile from Rail-Based Launcher)**

- ✓ இந்தியாவின் அதிநவீன ஏவுகணை நிலைநிறுத்தத் திறன்களைக் காண்பிக்கும் வகையில், இரயில் அடிப்படையிலான மொபைல் செலுத்து வாகனத்திலிருந்து அக்னி-பிரைம் இடைநிலை தூர பாலிஸ்டிக் ஏவுகணையை இந்தியா வெற்றிகரமாக சோதித்துள்ளது.



- ✓ 2000 கிமீ தூரம் வரை சென்று தாக்கும் திறன் மற்றும் தன்னிச்சையான ஏவுதள அமைப்புகள் மற்றம் பாதுகாப்பான தகவல் தொடர்பு போன்ற மேம்பட்ட அம்சங்களுடன் இந்த முதல் வகையான சோதனையானது அனைத்து பணி நோக்கங்களையும் பூர்த்தி செய்து, இந்தியாவின் மூலோபாய இயக்கம் மற்றும் தயார்நிலையை மேம்படுத்தியது.

APPOLO STUDY CENTRE

# பொருளாதாரம்

- **இந்தியாவின் வேலையின்மை விகிதம் 2025இல் 5.1 விழுக்காடாகக் குறைந்தது**

✓ இந்தியாவின் வேலையின்மை விகிதம் ஆகஸ்ட் 2025இல் 5.1 விழுக்காடாகக் குறைந்தது. ஜுன் மாதத்தில் 5.6 விழுக்காடாகவும், ஜுலை மாதத்தில் 5.2 விழுக்காடாகவும் இருந்த நிலையில், தொடர்ந்து கீழ்நோக்கிய போக்கைக் கொண்டுள்ளது என்று புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தால் நடத்தப்பட்ட காலமுறை தொழிலாளர் படை கணக்கெடுப்பு (Periodic Labour Force Survey) தெரிவிக்கிறது.




✓ ஆண்களில் வேலையின்மை 5 மாதங்களில் இல்லாத அளவுக்கு 5.0 விழுக்காடாகக் குறைந்துள்ளது. இதற்கு நகர்ப்புறம் (5.9 விழுக்காடு) மற்றும் கிராமப்புறம் (4.5 விழுக்காடு) ஆகிய இரண்டு பகுதிகளிலும் ஏற்பட்ட முன்னேற்றங்களே காரணம் ஆகும்.

✓ பெண் தொழிலாளர்களின் பங்களிப்பும் உயர்ந்துள்ளது. பெண்களிடையே தொழிலாளர் மக்கள் தொகை விகிதம் (Worker Population Ratio) 32 விழுக்காடாகவும், தொழிலாளர் படை பங்கேற்பு விகிதம் (Labour Force Participation Rate) 33.7 விழுக்காடாகவும் உயர்ந்தது.

✓ ஒட்டுமொத்த தொழிலாளர் படை பங்கேற்பு விகிதம் 55 விழுக்காடாக மேம்பட்டது. இது தொழிலாளர் சந்தை வலுவடைவதைக் குறிக்கிறது.

# நியமனங்கள்

- **தாய்லாந்தின் புதிய பிரதமர்**

✓ தாய்லாந்தின் புதிய பிரதமராக அனுடின் சார்ன்விரகுல் (Anutin Charnvirakul) தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆளும் ஃபியூ தாய் கட்சியின் வேட்பாளர் சாய்காசெம் நிதிசிரியை 63 விழுக்காடு வாக்குகள் வித்தியாசத்தில் அவர் தோற்கடித்தார்.



✓ எதிர்க்கட்சியான மக்கள் கட்சியின் ஆதரவுடன், அரசியல் குழப்பங்கள் மற்றும் தக்சின் ஷினவத்ரா துபாய்க்கு வெளியேறியதன் பின்னணியில், ஷினவத்ரா குடும்பத்தின் நீண்ட கால ஆதிக்க அரசியல் இயந்திரத்தை அனுடின் முறியடித்தார்.

- **இந்தியாவின் 15வது துணை ஜனாதிபதி**

✓ இந்தியாவின் 15வது துணை ஜனாதிபதியாக சி.பி. இராதாகிருஷ்ணன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அவர் இந்திய கூட்டணிக் கட்சி வேட்பாளர் நீதியரசர் பி. சுதர்ஷன் ரெட்டியை 452 முதல் விருப்ப வாக்குகள் பெற்று தோற்கடித்தார். அந்தத் தேர்தலில் 98.2 விழுக்காடு வாக்குகள் பதிவாகின.




✓ தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆதரவுடன், மகாராஷ்டிரா மற்றும் ஜார்க்காண்டின் முன்னாள் ஆளுநரும், கோவையிலிருந்து இரண்டு முறை எம்.பியாக இருந்தவருமாகிய இராதாகிருஷ்ணன், பல தசாப்த கால அரசியல் மற்றும் நிர்வாக அனுபவத்தைக் கொண்டவர் ஆவார்.

✓ ஜூலை 2025இல் ஜக்தீப் தங்கர் ராஜினாமா செய்த பிறகு அவர் இந்தப் பதவியை ஏற்கிறார்.

- **நார்வே பிரதமர் ஜோனாஸ் கஹர் ஸ்டோயர் (Jonas Gahr Stoere) இரண்டாவது முறையாகப் பதவியேற்றார்.**

✓ பிரதமர் ஜோனாஸ் கஹர் ஸ்டோயர் தலைமையிலான நார்வேயின் ஆளும் தொழிலாளர் கட்சி, நான்கு சிறிய இடதுசாரி சார்பு கட்சிகளின் ஆதரவுடன் இரண்டாவது முறையாக

ஆட்சியைப் பிடித்துள்ளது. இந்த அணி பெரும்பான்மைக்கு சற்று அதிகமாக 87 இடங்களைப் பிடித்தது.



- ✓ வலதுசாரி புகழ்பெற்ற முன்னேற்றக் கட்சி 48 இடங்களுடன் இதுவரை இல்லாத அளவுக்கு சிறந்த வெற்றியைப் பெற்றிருந்தபோதிலும், வாழ்க்கைச் செலவுகள், வரிகள் மற்றும் எண்ணெய் கொள்கை குறித்த வாக்காளர் கவலைகள் அதிகரித்து வரும் நிலையில், தொழிலாளர் கட்சியின் வெற்றி இருந்தபோதிலும், வலது சாரிக்கு மாற்றத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

➢ **நேபாளம் அதன் முதல் பெண் பிரதமரைப் பெறுகிறது**


- ✓ நேபாளத்தின் முதல் பெண் தலைமை நீதிபதியான சுஷிலா கார்க்கி, செப்டம்பர் 12, 2025 அன்று முதல் பெண் பிரதமராக பதவியேற்றதன்மூலம் வரலாறு படைக்கப்பட்டது.




- ✓ ஜென்-இசட் போராட்டக் குழுக்கள், நேபாள இராணுவம் மற்றும் ஜனாதிபதி ராம் சந்திர பவுடேல் ஆகியோரின் ஆதரவைப் பெற்ற கார்க்கியின் பதவி உயர்வு, இந்த இமயமலை நாட்டிற்கு ஒரு அரசியல் மீள் எழுச்சியைக் குறிக்கிறது.
- ✓ 73 வயதில், நேபாளத்தின் தலைமை நீதிபதியாகவும், மூத்த வழக்கறிஞராகவும் பணியாற்றிய பல தசாப்த கால சட்ட அனுபவத்தை அவர் கொண்டுள்ளார்.

➢ **இந்திய அட்டார்னி ஜெனரலாக ஆர். வெங்கடரமணி மீண்டும் நியமிக்கப்பட்டார்**

- ✓ மூத்த வழக்கறிஞரான ஆர். வெங்கடரமணி தனது ஆரம்ப மூன்று ஆண்டு பதவிக்காலம் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, அக்டோபர் 1, 2025 முதல் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு இந்திய அட்டார்னி ஜெனரலாக மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.




- ✓ அவர் 2022ஆம் ஆண்டு கே.கே. வேணுகோபாலுக்குப் பிறகு, 16வது அட்டார்னி ஜெனரலாகப் பொறுப்பேற்றார். அரசின் உயர் சட்ட அதிகாரியாகப் பணியாற்றினார்.

# விருதுகள்

➢ **பெண்களைப் பயிற்றுவிப்போம் (Educate Girls) அமைப்பு 2025ஆம் ஆண்டு ராமன் மகேசே விருதை வென்றது.**

✓ ச∴.பீனா ஹுசைன் நிறுவிய இந்திய அரசு சாரா நிறுவனமான பெண்களைப் பயிற்றுவிப்போம் அமைப்புக்கு, இந்தியாவின் தொலைதூர கிராமங்களில் பள்ளி செல்லாத சிறுமிகளுக்கு கல்வி கற்பதில் அயராது உழைத்ததற்காக 2025ஆம் ஆண்டு ராமன் மகசேசே விருது வழங்கப்பட்டுள்ளது.




✓ அதன் திறந்தநிலைப் பள்ளி முயற்சியாகிய பிரகதி, இப்போது 31,500க்கும் மேற்பட்ட இளம் பெண்களுக்கு ஆதரவளிக்கிறது.

✓ 'ஆசிய நோபல் பரிசு' என்று அழைக்கப்படும் ஆசியாவின் மிக உயரிய விருதை வென்ற ஒரு இந்திய அமைப்புக்கு இது ஒரு வரலாற்று சிறப்புமிக்க முதல் நிகழ்வாகும். இது பெண் கல்விக்கான இந்தியாவின் இயக்கத்தை எடுத்துக்காட்டுகிறது.

➢ **உலகளாவிய அமைதிக் குறியீடு 2025**

✓ பொருளாதாரம் மற்றும் அமைதி நிறுவனத்தின் 2025 உலகளாவிய அமைதி குறியீடு உலகளாவிய கொந்தளிப்புக்கு மத்தியில் ஒரு நம்பிக்கைக்குரிய பார்வையை வழங்குகிறது.




✓ இது, அமைதி, நிர்வாகம், சமூக நம்பிக்கை மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றின் அடிப்படையில் நாடுகளைத் தரவரிசைப்படுத்துகிறது.

✓ ஐஸ்லாந்து தொடர்ந்து 18வது ஆண்டாக பட்டியலில் முதலிடத்தில் உள்ளது

✓ மற்ற அமைதியான நாடுகளில் அயர்லாந்து, நியூசிலாந்து மற்றும் சுவிட்சர்லாந்து ஆகியவை அடங்கும்.

✓ முதல் 10 இடங்களில் ஆசியாவின் ஒரே பிரதிநிதியாக சிங்கப்பூர் தனித்து நிற்கிறது.

✓ இந்தியா 115வது இடத்தில் உள்ளது. இது தொடர்ச்சியான சவால்களைப் பிரதிபலிக்கிறது.

✓ பிராந்திய மோதல்கள், நகர்ப்புற குற்றங்கள் மற்றும் உள் பதட்டங்கள் அதன் அமைதி தரவரிசையை பாதிக்கின்றன.

- **தேசிய நிறுவன தரவரிசைக் கட்டமைப்பு (NIRF) அறிக்கையின்படி, இந்திய தொழில்நுட்பக்கழகம் சென்னை முதலிடத்தில் உள்ளது**

✓ பொறியியல் பிரிவில் இந்திய தொழில்நுட்பக் கழகம், சென்னை தொடர்ந்து 10வது ஆண்டாக முதலிடத்தைத் தகக வைத்துக் கொண்டுள்ளது என்ற செய்தியால் மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது.




✓ குறிப்பிடத்தக்க வகையில், இது புதுமைகள் பிரிவிலும், புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட நிலையான வளர்ச்சி இலக்குகள் பிரிவிலும் முதலிடத்தைப் பிடித்துள்ளது. அதே சமயம் ஆராய்ச்சி நிறுவனங்கள் பிரிவில் இரண்டாவது இடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது. இந்தப் பிரிவில் இந்திய அறிவியல் நிறவனம் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

- **பொருளாதாரத்திற்கான பி.வி. நரசிம்மராவ் விருது**

✓ முன்னாள் பிரதமரும் பிரபல பொருளாதார நிபுணருமான மறைந்த டாக்டர். மன்மோகன் சிங்கிற்கு, இந்தியாவின் பொருளாதார மாற்றத்தில் முக்கிய பங்கு வகித்ததற்காக, பொருளாதாரத்திற்கான பி.வி. நரசிம்ம ராவ் நினைவு விருது வழங்கப்பட்டது.




✓ பி.வி. நரசிம்மராவ் நினைவு அறக்கட்டளை நிறுவிய இந்த விருதை, மான்டெக் சிங் அலுவாலியா வழங்கினார். சிங்கின் மனைவி குர்ஷரன் கவுர், புதுதில்லியில் அதைப் பெற்றுக் கொண்டார்.

- **நீரிழிவு ஆய்வுக்கான ஐரோப்பிய சங்கத்தின் நீரிழிவு உலகளாவிய தாக்க பரிசு (EASD Diabetes Global Impact Prize)**

✓ நீரிழிவு மருத்துவரும் டாக்டர் மோகன் நீரிழிவு ஆராய்ச்சி அறக்கட்டளையின் தலைவருமான வி. மோகனுக்கு, ஆஸ்திரியாவின் வியன்னாவில் நடைபெற்ற 61வது ஆண்டு மாநாட்டின்போது, நீரிழிவு ஆய்வுக்கான ஐரோப்பிய சங்கத்தால் 2025ஆம் ஆண்டுக்கான தொடக்க நீரிழிவு உலகளாவிய தாக்கப் பரிசு வழங்கப்பட்டது.



- நீரிழிவு சுகாதாரம், ஆராய்ச்சி, கல்வி, பயிற்சி, தொண்டு, விழிப்புணர்வு மற்றும் கொள்கை ஆகியவற்றில் பல தசாப்தங்களாக அவர் ஆற்றிய பங்களிப்புகளை கௌரவிக்கும் வகையில் இந்த மதிப்புமிக்க விருது முதல்முறையாக அவருக்கு வழங்கப்பட்டது.

➢ **கலைமாமணி விருது வென்றவர்களின் பட்டியல்**




➢ **பல்வேறு பிரிவுகளில் 2021ஆம் ஆண்டுக்கான வெற்றியாளர்கள் பட்டியல்:**
- சாய் பல்லவி (நடிகை)
- எஸ்.ஜே. சூர்யா (நடிகர்)
- லிங்குசாமி (இயக்குநர்)
- ஸ்டண்ட் சுப்பராயன் (சண்டைப் பயிற்சியாளர்)

➢ **2022ஆம் ஆண்டுக்கான பல்வேறு பிரிவு வெற்றியாளர்கள்:**
- விக்ரம் பிரபு (நடிகர்)
- ஜெயா குகநாதன் (நடிகை)
- விவேக் (பாடலாசிரியர்)
- டயமண்ட் பாபு (பிஆர்ஓ ஆலோசகர்)
- டி. லட்சுமிகாந்தன் (புகைப்படக் கலைஞர்)

➢ **2023ஆம் ஆண்டுக்கான பல்வேறு பிரிவு வெற்றியாளர்கள்:**
- அனிருத் ரவிச்சந்தர் (இசையமைப்பாளர்)
- ஸ்வேதா மோகன் (பாடகர்)
- கே. மணிகண்டன் (நடிகர்)
- ஜார்ஜ் மரியன் (நடிகர்)


➢ **தேசிய புவி அறிவியல் விருதுகள்**
- இந்திய குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, புவியியலில் சிறந்த பங்களிப்புகளை அங்கீகரித்து, குடியரசுத் தலைவர் மாளிகை கலாச்சார மையத்தில் 2024ஆம் ஆண்டுக்கான தேசிய புவி அறிவியல் விருதுகளை வழங்கினார்.




- ✓ இந்த ஆண்டு, 20 புவியியலாளர்கள் 12 விருதுகளைப் பெற்றனர். இதில் நில அதிர்வு ஆராய்ச்சிக்காக பேராசிரியர் ஷியாம் சுந்தர் ராய்க்கு வாழ்நாள் சாதனையாளர் விருதும், டெக்டோனிக் ஆய்வுகளுக்காக ஸ்ரீசுசோபன் நியோகிக்கு இளம் புவி அறிவில் நிபுணர் விருதும் அடங்கும்.


# புத்தகங்களும் ஆசிரியர்களும்

- **சோழ புலிகள்: அவெஞ்செர்ஸ் ஆப் சோம்நாத் (The Chola Tigers: Avengers of Somnath)**
- ✓ அமிஷ் திரிபாதி தனது இண்டிக் க்ரோனிக்கிள்ஸ் தொடரின் இரண்டாவது புத்தகமான தி சோழ டைகர்ஸ் அவெஞ்சர்ஸ் ஆப் சோம்நாத்தை கிராஸ்வேர்ட் கெம்பஸ் கார்னரில் வெளியிட்டார்.





- ✓ சிவா முத்தொகுப்பு மற்றும் ராம் சந்திரா தொடர் போன்ற புராண – புனைகதைப் படைப்புகளுக்குப் பெயர் பெற்ற அமிஷ், இந்தியாவின் கலாச்சார பாரம்பரியத்தை மீண்டும் பார்வையிட வாசகர்களைத் தொடர்ந்து ஊக்குவித்து வருகிறார். இதில் 8 மில்லியனுக்கும் அதிகமான புத்தகங்கள் விற்பனையாகியுள்ளன.

- **அருந்ததி ராயின் நினைவுக் குறிப்பு 'மதர் மேரி கம் டு மீ' (Mother Mary Come To Me)**
- ✓ செப்டம்பர் 2, 2025 அன்று வெளியிடப்பட்ட அருந்ததி ராயின் நினைவுக் குறிப்பு, 'மதர் மேரி கம் டு மீ' புகழ்பெபற்ற பெண் உரிமை ஆர்வலரும், கல்வியாளருமான அவரது தாயார் மேரி ராயுடன் அவருக்கு இருந்த சிக்கலான உறவின் ஆழமான தனிப்பட்ட மற்றும் உணர்ச்சிபூர்வமான பதிவு ஆகும்.





- ✓ 374 பக்கங்களைக் கொண்ட இந்தப் புத்தகம் துஷ்பிரயோகம், புறக்கணிப்பு, அன்பு மற்றும் படைப்பு மரபுரிமை ஆகிய கருப்பொருள்களை ஆராய்கிறது. மேரியின் புத்திசாலித்தனம் மற்றும் நிலையற்ற தன்மை ராயை எவ்வாறு காயப்படுத்தியது மற்றும் வடிவமைத்தது என்பதை இந்தப் புத்தகம் வெளிப்படுத்துகிறது.

- **ராக்கெட் கனவுகள்: பில்லியனர்கள், அதிகாரம் மற்றும் புதிய விண்வெளி பந்தயம் (Rocket Dreams: Billionaires, Power, and the New Space Race)**




- ✓ இன்றைய விண்வெளிப் பந்தயம், எலோன் மஸ்கின் ஸ்பேஸ் எக்ஸ் மற்றும் ஜெ.ஃ.ப் பெசோஸின் ப்ளூ ஆரிஜின் இடையேயான பில்லியனர் போட்டிகளால் எவ்வாறு இயக்கப்படுகிறது என்பதை கிறிஸ்டியன் டேவன்போர்ட்டின் ராக்கெட் ட்ரீம்ஸ் அம்பலப்படுத்துகிறது. தூய அறிவியல் ஆய்வுக்குப் பதிலாக ஈகோ, வழக்குகள் மற்றும் அரசியல் போர்களில் கவனம் செலுத்துகிறது. விண்வெளி ஒரு உயரடுக்கு, டிரில்லியன் டாலர் மதிப்புள்ள தொழிலாக மாறுவது, செல்வந்தர்களுக்கு மட்டுமே பயனளிப்பது பற்றிய கவலைகளை எழுப்புகிறது.


- **மக்கள் தொகை, பிரதிநிதித்துவம், எல்லை நிர்ணயம் (Demography, Representation, Delimitation)**
- ✓ ரவி கே. மிஸ்ராவின் 'மக்கள் தொகை, பிரதிநிதித்துவம், எல்லை நிர்ணயம்: இந்தியாவில் வடக்கு-தெற்குப் பிரிவு' என்ற புத்தகம், எல்லை நிர்ணய விவாதங்கள் மற்றும் மக்களவைத் தொகுதி எல்லைகளை மறு வரையறை செய்வதில் உள்ள சிக்கல்களை ஆராய்கிறது.




- ✓ தென் மாநிலங்கள் மக்கள்தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்தின என்ற கதைக்கு மிஸ்ரா சவால் விடுகிறார். மக்கள் தொகை மாற்ற காலக்கெடுவில் அவை முன்னதாகவே முன்னேறின என்று அவர் வலியுறுத்துகிறார்.

- **அரசியலமைப்பு ஏன் முக்கியமானது? (Why the Constitution Matters)**
- ✓ முன்னாள் இந்திய தலைமை நீதிபதி, டி.ஒய். சந்திரசூட்டின் முதல் புத்தகமான, பென்குயின் ரேண்டம் ஹவுசால் வெளியிடப்பட்ட, 'அரசியலமைப்பு ஏன் முக்கியமானது,' என்ற புத்தகம் நீதி, சமத்துவம், சுதந்திரம் மற்றும் மனித உரிமைகள் போன்ற

அரசியலமைப்பு மதிப்புகள் இந்தியர்களின் அன்றாட வாழ்க்கையை எவ்வாறு வடிவமைக்கின்றன என்பதை ஆராய்கிறது.




- ✓ இந்தப் புத்தகம் நீதித்துறை விளக்கம், ஜனநாயக ஈடுபாடு, மதச்சார்பின்மை மற்றும் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதில் நீதித்துறையின் பங்கு போன்ற கருப்பொருள்களை எடுத்துக்காட்டுகிறது. இது பொதுமக்களுக்கு சிந்திக்கத் தூண்டும் மற்றும் அணுகக் கூடிய வாசிப்பாக அமைகிறது.

APOLLO STUDY CENTRE

# அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல்

➢ **இஸ்ரோவின் குலசேகரப்பட்டினம் விண்வெளி நிலையம்**

✓ தமிழ்நாட்டில் உள்ள குலசேகரப்பட்டினம் ஏவுதளம் 2300 ஏக்கர் பரப்பளவில் டிசம்பர் 2026க்குள் தயாராக இருக்கும் என்றும், 500 கிலோ வரை எடையுள்ள பொருட்களை சுமந்து செல்லும் சிறிய செயற்கைக்கோள் ஏவுதள வாகனங்கள் ஆண்டுதோறும் 20-25 ஏவுதல்களை மேற்கொள்ளும் என்றும் இஸ்ரோ தலைவர் அறிவித்தார்.




✓ இந்தப் புதிய விண்வெளி நிலையம் ஸ்ரீஹரிகோட்டாவில் தற்போதுள்ள வசதியை நிறைவு செய்யும். இது இந்தியாவின் செயற்கைக்கோள் ஏவுதள திறன்களை மேம்படுத்தும்.

➢ **இரத்த நிலவு**

✓ செப்டம்பர் 7-8, 2025 இரவு ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா மற்றும் ஆஸ்திரேலியா முழுவதும் 82 நிமிடங்கள் நீடிக்கும் ஒரு கண்கவர் முழு சந்திரகிரகணம் - இரத்த நிலவு என்று அழைக்கப்படுகிறது. இது இந்த ஆண்டின் மிக நீண்டதாக இருக்கும்.



✓ இந்த அபூர்வமான நிகழ்வின்போது, பூமியின் நிழல் அதை முழுவதுமாக மூடுவதால், ரேலி சிதறல் காரணமாக சந்திரன் அடர் சிவப்பு நிறமாக மாறும்.

✓ இந்தக் கிரகணம் அறிவியல், கலாச்சார மற்றும் கல்வி முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது. குறிப்பாக இது அறுவடை நிலவுடன் ஒத்துப் போகிறது. இது உலக அளவில் வானத்தைக் கண்காணிப்பவர்கள் கட்டாயம் பார்க்க வேண்டிய நிகழ்வாகக் குறிக்கப்படுகிறது.

➢ **இந்திய இராணுவத்தின் சம்பவ் (SAMBHAV), சிந்தூர் தகவல் தொடர்புகளை செயல்படுத்துகிறது.**

✓ சிந்தூர் நடவடிக்கையின்போது, இந்திய இராணுவம் வாட்ஸ்ஆப் போன்ற செயலிகளை அதன் உள்நாட்டு, 5ஜி இயக்கப்பட்ட பாதுகாப்பான தகவல் தொடர்பு அமைப்பான சம்பவ் ((Secure Army Mobile Bharat Version – பாதுகாப்பான இராணுவ மொபைல் பாரத் பதிப்பு) மூலம் மாற்றியது. இது பல அடுக்கு குறியாக்கத்தைக் கொண்டுள்ளது.




✓ தரவு பாதுகாப்பு மற்றும் செயல்பாட்டு ரகசியத்தை உறுதி செய்வதற்கான எம்-சிக்மா செய்தியிடல் செயலியை இராணுவத் தலைமைத் தளபதி உபேந்திர த்விவேதி வெளிப்படுத்தியுள்ளார். இது இந்தியாவின் ஆத்மநிர்பர் பாரதத்திற்கான உந்துதலையும், நவீன தொழில்நுட்பத்தை இராணுவ மூலோபாயத்துடன் கலப்பதையும் எடுத்துக்காட்டுகிறது.

➢ **விண்வெளி ஆய்வில் இந்தியா ஒன்பது உலக சாதனைகளைப் பெற்றுள்ளது**


✓ விண்வெளி ஆராய்ச்சியில் இந்தியா ஒன்பது முக்கிய உலக சாதனைகளைப் பெற்றுள்ளது. இஸ்ரோ தலைவர் வி. நாராயணன் வரும் ஆண்டுகளில் 8-10 சாதனைகளை அடையும் திட்டங்களை அறிவித்தார். செவ்வாய் கிரக சுற்றுப்பாதைத் திட்டம் (முதல் முயற்சியிலேயே செவ்வாய் கிரகத்தை அடைந்த முதல் நாடு), பிஎஸ்எல்வி-சி37 (ஒரே பயணத்தில் 104 செயற்கைக் கோள்களை ஏவியது) மற்றும் சந்திரயான்-3 (சந்திர தென் துருவத்திற்கு அருகில் தரையிறங்கிய முதல் விண்கலம்) போன்ற மைல்கற்களை மேற்கோள் காட்டி அவர் இவ்வாறு தெரிவித்தார்.




✓ 2040ஆம் ஆண்டுக்குள் சந்திரனில் மனிதனை தரையிறக்கும் துணிச்சலான தொலைநோக்குப் பார்வையுடன், இஸ்ரோவின் செலவு குறைந்த கண்டுபிடிப்புகள், விரைவான கிரையோஜெனிக் தொழில்நுட்ப மேம்பாடு ஆகியவற்றை அவர் எடுத்துரைத்தார்.

➢ **அல்பேனியா உலகின் முதல் செயற்கை நுண்ணறிவு கேபினட் அமைச்சரை நியமித்தது**

✓ செயற்கை நுண்ணறிவு ஆற்றல் மிக்க அமைச்சரை நியமித்த உலகின் முதல் நாடாக அல்பேனியா மாறியுள்ளது. பொது கொள்முதலை மேற்பார்வையிடுவதற்குப் பொறுப்பான மெய்நிகர் அதிகாரியான ‘டியெல்லாவை’ (Diella) அது அறிமுகம் செய்து வைத்தது.



- செப்டம்பர் 11, 2025 அன்று பிரதமர் எடி ராமாவால் தொடங்கப்பட்ட டியெல்லா, அல்பேனியாவின் டிஜிட்டல் சேவை போர்ட்டல் மூலம் செயல்படுகிறது, டெண்டர்களைச் செயலாக்குகிறது மற்றும் குரல் கட்டளைகளைப் பயன்படுத்தி 36,000க்கும் மேற்பட்ட ஆவணங்கள் மற்றும் 1000க்கும் மேற்பட்ட சேவைகளைக் கையாளுகிறது.
- ஊழலை எதிர்த்துப் போராடுவதில் அதன் புதுமைக்காக இந்த நடவடிக்கை பாராட்டப்பட்டாலும், சாத்தியமான நெருக்கடிகளுக்கு வழிவகுக்கும் செயற்கை நுண்ணறிவ நிர்வாகக் குறைபாடுகளுடன் தொடர்புடைய அபாயங்கள் குறித்து விமர்சகர்கள் எச்சரிக்கின்றனர்.

## ‘சென்னை ஒன் (Chennai One)’ – அனைத்துக்குமான ஒரே பாஸ்

- சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து ஆணையத்தால் (Chennai Unified Metropolitan Transport Authority) உருவாக்கப்பட்ட ஒரு மொபைல் செயலியான ‘சென்னை ஒன்’ பயணிகள் பயணம் செய்வதற்கு ஒற்றை கியூ ஆர் குறியீட்டு டிக்கெட்டைப் பயன்படுத்த அனுமதிக்கிறது.




- நீண்ட காலமாக செயல்பாட்டில் உள்ள இந்த செயலியானது, சென்னை மெட்ரோ ரயில் மற்றும் புறநகர் இரயில்களின் டிஜிட்டல் டிக்கெட்டிங் தளங்களை – மாஸ் ரேபிட் டிரான்சிட் சிஸ்டம் உட்பட – பெருநகர போக்குவரத்துக் கழகத்தின் மின்னணு டிக்கெட்டிங் அமைப்புடன் ஒருங்கிணைத்து உருவாக்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாட்டில் சிவப்பு கழுத்து பலரோப் (Red-Necked Phalarope) காணப்பட்டது

- அரிய வகை இடம்பெயர்வுப் பறவையான சிவப்பு கழுத்து பலரோப் பலரோபஸ் லோபாட்டஸ்) சமீபத்தில் திருப்பூர் நகரத்தில் உள்ள நஞ்சராயன் பறவைகள் சரணாலயத்தில் காணப்பட்டது.



- இந்த உள்நாட்டு நீர்நிலையில் இந்த இனம் பதிவு செய்யப்படுவது இதுவே முதல் முறையாகும்.
- அந்தப் பறவை காணப்பட்டதை உள்ளூர் பறவை ஆர்வலர்கள் மற்றும் திருப்பூர் இயற்கை சங்க உறுப்பினர்கள் உறுதிப்படுத்தினர்.

✓ நஞ்சராயன் போன்ற உள்நாட்டு ஈரநிலங்களைப் பாதுகாக்க வெண்டியதன் அவசியத்தை இந்த கண்டுபிடிப்பு குறிக்கிறது.

➢ **ஐ.நாவின் செயற்கை நுண்ணறிவு மையமாக இந்திய தொழில்நுட்பக் கழகம், சென்னையை இந்தியா பரிந்துரைத்துள்ளது**

✓ டிஜிட்டல் மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களுக்கான ஐ.நா அலுவலகம் (Office for Digital and Emerging Technologies) முன்முயற்சியின்கீழ், செயற்கை நுண்ணறிவு திறன் மேம்பாடு மற்றும் திறன் மேம்பாட்டிற்கான ஐ.நா சிறப்பு மையமாக ஐஐடி, சென்னையை இந்தியா பரிந்துரைத்துள்ளது.




✓ இந்தியா தனது இந்திய செயற்கை நுண்ணறிவு இயக்கம் மூலம் ஆண்டுதோறும் 10 மில்லியன் மக்களை திறன் பெறச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், உலகளாவிய ஒத்துழைப்பை வளர்ப்பதற்காக பிப்ரவரி 2026இல் செயற்கை நுண்ணறிவு தாக்க உச்சி மாநாட்டை நடத்த உள்ளது.

➢ **ஆப்டெரிக்டஸ் கன்னியாகுமரி (Apterichtus kanniyakumari)**

✓ ஆப்டெரிக்டஸ் கன்னியாகுமரி என்பது கொலச்சல் கடற்கரையில் காணப்படும் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட துடுப்பு இல்லாத பாம்பு விலங்கு இனமாகும்.




✓ கன்னியாகுமரி என்று பெயரிடப்பட்ட இது ஆப்டெரிக்டஸ் இனத்தைச் சேர்ந்தது ஆகும். அதன் தங்க-மஞ்சள் உடல், மஞ்சள் கோடுகளுடன் வெளிர் வெள்ளை வயிற்றுத் தலை மற்றும் மூன்று தனித்துவமான கருப்பு புள்ளிகள் ஆகியவற்றால் வேறுபடுகிறது.

# விளையாட்டுகள்

- **ஆடவர் ஆசிய கோப்பை ஹாக்கி**
  - ✓ தென்கொரியாவை 4-1 என்ற கணக்கில் வீழ்த்தி இந்தியா, தனது 4வது ஆண்கள் ஆசிய கோப்பை ஹாக்கி பட்டத்தை வென்றது.




  - ✓ நெதர்லாந்து மற்றும் பெல்ஜியத்தில் நடைபெறும் 2026 ஆண்கள் ஹாக்கி உலகக் கோப்பைக்கு இந்தியா தகுதி பெற்றுள்ளது.
  - ✓ இந்தியாவுக்காக சுக்ஜீத், தில்ப்ரீத் (2), மற்றும் அமித் ரோஹிதாஸ் ஆகியோர் கோல் அடித்துள்ளனர்.
  - ✓ ஆசிய ஹாக்கி மேலாதிக்கத்தை மீண்டும் பெறுவதற்கான 8 ஆண்டு காத்திருப்பை இந்தியா முடிவுக்குக் கொண்டு வந்துள்ளது.

- **க.ஃ.பா தேசிய கோப்பை (CAFA Nations Cup) 2025**
  - ✓ தஜிகிஸ்தானின் ஹிசோர் சென்ட்ரல் விளையாட்டு மைதானத்தில் 1-1 என்ற சமநிலைக்குப் பிறகு 3-2 பெனால்டி ஷூட் அவுட் மூலம் ஓமனைத் தோற்கடித்து, க.ஃ.பா தேசியக் கோப்பை 2025இல் மூன்றாவது இடத்தைப் பிடித்து இந்தியா வரலாறு படைத்தது.




  - ✓ இது ஓமனுக்கு எதிரான இந்தியாவின் முதல் வெற்றியையும், போட்டியில் முதல் பதக்கத்தையும் குறிக்கிறது.
  - ✓ இந்த வெற்றி இந்தியாவின் வளர்ந்து வரும் கால்பந்து தரநிலைகள், மூலோபாய வளர்ச்சி மற்றும் மன உறுதியை வெளிப்படுத்துகிறது. இது இந்திய கால்பந்து வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாக அமைகிறது.

APOLLO STUDY CENTRE

➢ **உலக குத்துச்சண்டை போட்டிகள் 2025**

✓ லிவர்பூலில் நடைபெற்ற 2025 உலக குத்துச் சண்டை சாம்பியன்ஷிப் போட்டியில் 57 கிலோ பிரிவில் தங்கம் வென்று வரலாறு படைத்த இந்தியாவின் ஜெய்ஸ்மின் லம்போரியா, போலந்தின் ஜூலியா ஸ்செரெமெட்டாவை 4-1 என்ற வித்தியாசத்தில் தோற்கடித்தார்.



✓ இந்திய பெண்கள் குத்துச்சண்டை வீராங்கனைகள் மூன்று பதக்கங்களைப் பெற்றனர். நுபுர் ஷியோரன் வெள்ளி (80 பிளஸ் கிலோ) மற்றும் பூஜா ராணி வெண்கலம் வென்றனர். அதே சமயம், ஆண் குத்துச் சண்டை வீரர்கள் வெற்றியை எட்டத் தவறிவிட்டனர்.

➢ **வைஷாலி ஃபைட் (FIDE) கிராண்ட் சுவிஸ் பட்டத்தை வென்றார்**

✓ அவர் அந்த வெற்றியை மீண்டும் பெற்றுள்ளார். ஃபைட் கிராண்ட் சுவிஸ் போட்டியில் ஆர். வைஷாலி மீண்டும் சாம்பியன் ஆனார்.

✓ சதுரங்க நாட்காட்டியில் மிகவும் மதிப்புமிக்க போட்டிகளில் ஒன்றில் சென்னையைச் சேர்ந்த 24 வயதான இவர் தனது திறமையைக் காட்டினார்.



✓ இந்த முறை உஸ்பெக் நகரமான சமர்கண்டில், அவர் தனது பட்டத்தைத் தக்க வைத்துக் கொண்டார். இதன்மூலம் அடுத்த ஆண்டு உலக சாம்பியன்ஷிப்பிற்கான தகுதிப் போட்டியான வேட்பாளர் போட்டிக்கான டிக்கெட்டை பதிவு செய்துள்ளார்.

✓ அடுத்த எட்டு பெண் போர்டியாளர்களில் குறைந்தது மூன்று பேர் இந்தியர்களாக இருப்பதை அவர் உறுதி செய்துள்ளார். அது ஒரு சாதனை ஆகும். (கோனேரு ஹம்பி மற்றும் திவ்யா தேஷ்முக் மற்றவர்கள்).

➢ **11வது ஆசிய நீர்வழி போட்டிகள் சாம்பியன்ஷிப் 2025**

✓ அகமதாபாத்தில் உள்ள வீர சவர்க்கர் விளையாட்டு வளாகம் 11வது ஆசியா நீர்விளையாட்டு சாம்பியன்ஷிப்பை செப்டம்பர் 28 ல் அக்டோபர் 11, 2025 வரை நடத்தும். இது இந்தியாவில் முதல் முறையாக நடைபெறும் ரேபட்டிகளாகும்.




- ✓ குஜராத் விளையாட்டு ஆணையத்தின் ஆரவுடன், ஆசிய நீர்வழி வளையாட்டு மற்றும் இந்திய நீச்சல் கூட்டமைப்பு ஏற்பாடு செய்துள்ள இந்த சாம்பியன்ஷிப் போட்டியில், 29 நாடுகளைச் சேர்ந்த 900க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் நீச்சல், டைவிங் சுலை நீச்சல் மற்றும் வாட்டர் போலோவில் போட்டியிடுவார்கள்.

**➢ 12வது உலக பாரா தடகள சாம்பியன்ஷிப்**

- ✓ 12வது உலக பாரா தடகள சாம்பியன்ஷிப் போட்டிகள் 2025, புது தில்லியின் ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கத்தில் தொடங்கியது. ஒன்பது நாட்களில் 186 பதக்கப் போட்டிகள் இடம் பெற்றன. இதில் 100க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த 1000க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் பங்கேற்றனர்.




- ✓ இந்த நிகழ்வில் அதானசியோஸ் கவேலாஸ், எஸ்ரா ஃப்ரெச் மற்றும் கேத்தரின் டெப்ரன்னர் போன்ற உலக அளவிலான நட்சத்திரங்கள் பங்கேற்றனர். பதக்கம் வெல்லும் சுமித் ஆண்டில், பிரீத்தி பால் மற்றும் தரம்பீர் நைன் உள்ளிட்ட 70க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் இந்தியாவின் சார்பில் களமிறங்குவார்கள்.

**➢ இந்திய கிரிக்கெட் அணி 2025இல் 9வது ஆசிய கோப்பையை வென்றது**


- ✓ பாகிஸ்தானுக்கு எதிரான பரபரப்பான இறுதிப் போட்டியில் இந்தியா தனது ஒன்பதாவது ஆசிய கோப்பை பட்டத்தை வென்றது. திலக் வர்மா கடுமையான அழுத்தத்தின்கீழ் ஆட்டமிழக்காமல் 69 ரன்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் விளையாடினார்.




- ✓ அரசியல் ரீதியாக பரபரப்பான இந்தப் போட்டி, இந்தியா – பாகிஸ்தான் கிளாசிக் என்று நினைவுகூறப்படுகிறது. இறுதிப் போட்டியில் திலக் அடித்த ஒரு சிக்ஸருடன் உணர்ச்சிபூர்வமான கொண்டாட்டத்துடன் போட்டி முடிவுக்கு வந்தது.

# அறிக்கைகள்

- **2025 உலக வர்த்தக அறிக்கை**
- ✓ உலக வர்த்தக அமைப்பின் 2025 உலக வர்த்தக அறிக்கை, 2040 ஆம் ஆண்டுக்குள் செயற்கை நுண்ணறிவு உலகளாவிய வர்த்தகம் மற்றும் பொருளாதார வளர்ச்சியை எவ்வாறு மாற்றும் என்பதைக் கோடிட்டுக்காட்டுகிறது.




- ✓ உற்பத்தித் திறன் அதிகரிப்பு மற்றும் குறைக்கப்பட்ட வர்த்தக செலவுகள் காரணமாக எல்லை தாண்டிய வர்த்தக மதிப்பில் கிட்டத்தட்ட 40 விழுக்காடு உயர்வு இருக்கும் என்று இது கணித்துள்ளது.
- ✓ 2040ஆம் ஆண்டுக்குள் செயற்கை நுண்ணறிவு உலகளாவிய வர்த்தகத்தை 34-37 விழுக்காடு அதிகரிக்கவும், உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியை 12-13 விழுக்காடு அதிகரிக்கவும் முடியும்.

- **இந்தியாவில் குழந்தைகள் 2025 அறிக்கை**
- ✓ புள்ளிவிவரங்கள் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம், இந்தியாவில் குழந்தைகளின் நிலை குறித்த விரிவான தரவுகளை வழங்கும் 'இந்தியாவில் குழந்தைகள் 2025'இன் நான்காவது பதிப்பை வெளியிட்டுள்ளது.




- ✓ 2011ஆம் ஆண்டில் 44 ஆக இருந்த குழந்தை இறப்பு விகிதம் 2023 இல் 25 ஆகக் கணிசமாகக் குறைந்துள்ளது. 2022-23இல் 13.8 விழுக்காடாக இருந்த இடைநிற்றல் விகிதம் 2024-25இல் 8.2 விழுக்காடாக குறைந்துள்ளது. மேலும் 18 வயதுக்கு முன் திருமணம் செய்து கொள்ளும் பெண்களின் விழுக்காடு 26.8 (2015-16) விழுக்காட்டிலிருந்து, 23.3 விழுக்காடு (2019-21) ஆகக் குறைந்துள்ளது ஆகியவை முக்கிய சிறப்பம்சங்கள் ஆகும்.
- ✓ தத்தெடுப்பு எண்ணிக்கை 2017-18இல் 3,927 ஆக இருந்தது, 2024-25இல் 4,515 ஆக அதிகரித்துள்ளது.
- **2025ஆம் ஆண்டுக்குள் இந்தியாவில் குழந்தைத் திருமணம் கடுமையாகக் குறையும்**

- ✓ சமீபத்திய தரவுகள் இந்தியா முழுவதும் குழந்தை திருமணம் குறைவதைக் காட்டுகின்றன.
- ✓ ஜஸ்ட் ரைட்ஸ் ஃபார் சில்ட்ரன் (Just Rights for Children) என்ற அமைப்பின் புதிய அறிக்கை, பெண்கள் மத்தியில் 69 விழுக்காடு மற்றும் சிறுவர்களிடையே 72 விழுக்காடு சரிவைக் காட்டுகிறது.



- ✓ இந்த முன்னேற்றம் அரசு, மாநில அதிகாரிகள் மற்றும் குடிமைச் சமூகத்தின் ஒருங்கிணைந்த முயற்சிகளின் விளைவாகும்.
- ✓ இந்த அறிக்கையானது ஐந்து மாநிலங்களில் உள்ள 757 கிராமங்களிலிருந்து பெறப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டது. இது இந்தியாவின் மாறுபட்ட சமூக மற்றும் கலாச்சார சூழல்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

APOLLO STUDY CENTRE

# தரவரிசைப்பட்டியல்

- **உலகளாவிய கண்டுபிடிப்பு அட்டவணை 2025**

✓ WIPO உலகளாவிய கண்டுபிடிப்பு அட்டவணை 2025இல் இந்தியா உலக அளவில் 38வது இடத்தில் உள்ளது. இது 2020ஆம் ஆண்டில் 48வது இடத்திலிருந்து நிலையாக முன்னேறியுள்ளதைக் குறிக்கிறது. இந்தியா கீழ்-நடுத்தர வருமானம் கொண்ட பொருளாதாரங்கள் மற்றும் மத்திய மற்றும் தெற்கு ஆசிய பிராந்தியத்தில் முதலாம் இடத்தைப் பிடித்துள்ளது.




✓ இந்தப் பட்டியலில் சுவிட்சர்லாந்து உலக அளவில் முதல் இடத்தைப் பிடித்தது. அதே சமயம் சுவீடன் 2ஆம் இடத்தையுயம், அமெரிக்கா 3ஆம் இடத்தையும் பிடித்துள்ளது.

✓ சீனா 10ஆம் இடத்தைப் பிடித்துள்ளது. அது காப்புரிமை தாக்கல், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி செலவு மற்றும் தொழில்நுட்ப வெளியீடுகளில் சிறப்பாக செயல்படுகிறது.

# முக்கிய தினங்கள்

| நாள் | தினம் | மையக் கருத்து |
|---|---|---|
| செப்டம்பர் 1-7 | தேசிய ஊட்டச்சத்து வாரம் | மையக்கருத்து: சிறந்த வாழ்க்கைக்கு சரியாக சாப்பிடுங்கள் |
| செப்டம்பர் 2 | உலக தேங்காய் நாள் | மையக்கருத்து: தேங்காயின் சக்தியைக் கண்டுபிடிப்பது, உலகளாவிய நடவடிக்கைக்கு ஊக்கமளிக்கிறது. |
| செப்டம்பர் 5 | தேசிய ஆசிரியர் தினம் | மையக்கருத்து: அடுத்த தலைமுறை கற்பவர்களை ஊக்குவித்தல் |
| செப்டம்பர் 8 | சர்வதேச கல்வியறிவு நாள் | மையக்கருத்து: டிஜிட்டல் சகாப்தத்தில் கல்வியறிவை ஊக்குவித்தல் |
| செப்டம்பர் 8 | உலக இயன்முறை மருத்துவ தினம் | மையக்கருத்து: ஆரோக்கியமாக முதுமையை அடைதல் |
| செப்டம்பர் 10 | உலக தற்கொலை தடுப்பு நாள் | மையக்கருத்து: தற்கொலை குறித்த கதைகளை மாற்றுதல் |
| செப்டம்பர் 11 | தேசிய வன தியாகிகள் தினம் | மையக்கருத்து 2024: எங்கள் காடுகளின் பாதுகாவலர்களை கௌரவித்தல் |
| செப்டம்பர் 13 | உலக முதலுதவி நாள் | மையக்கருத்து: முதலுதவி மற்றும் காலநிலை மாற்றம் |
| செப்டம்பர் 15 | தேசிய பொறியாளர்கள் தினம் | மையக்கருத்து: ஆழமான தொழில்நுட்பம் மற்றும் பொறியியல் சிறப்பு: இந்தியாவின் டெக்கேடை இயக்குதல் |
| செப்டம்பர் 15 | சர்வதேச ஜனநாயக தினம் | மையக்கருத்து: பாலின சமத்துவத்தை அடைதல், செயல்மூலம் நடவடிக்கை எடுத்தல் |
| செப்டம்பர் 16 | சர்வதேச தலையீட்டு இருதயவியல் தினம் | இந்த நாள் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், குறைந்த அளவில் அறுவை சிகிச்சை மூலம் இதய நோய்களுக்கு சிகிச்சையளிப்பதில் அதன் முக்கிய பங்கிற்காகவும் அர்ப்பணிக்கப்படுகிறது. |
| செப்டம்பர் 16 | உலக ஓசோன் தினம் | மையக்கருத்து: அறிவியலிலிருந்து உலகளாவிய நடவடிக்கை வரை |
| செப்டம்பர் 18 | உலக மூங்கில் தினம் | அடுத்த தலைமுறை மூங்கில்: தீர்வு, புதுமை மற்றும் வடிவமைப்பு |
| செப்டம்பர் 18 | சர்வதேச சம ஊதிய | மையக்கருத்து 2024: ஊதிய |

| | | |
|---|---|---|
| | நாள் | பாகுபாட்டை அகற்ற வேண்டும் |
| செப்டம்பர் 20 | உலக தூய்மைப்படுத்துதல் நாள் | ‘ஆர்க்டிக் நகரங்கள் மற்றும் கடல் குப்பை’ |
| செப்டம்பர் 21 | சர்வதேச அமைதி நாள் | மையக்கருத்து: அமைதிக்கான நடவடிக்கைகள்: அமைதியை வளர்ப்பதற்கான எங்கள் கூட்டு மற்றும் தனிப்பட்ட கடமைகளை அடிக்கோடிட்டுக் காட்டும் - உலகளாவிய இலக்குகளுக்கான எங்கள் அர்ப்பணிப்பு |
| செப்டம்பர் 21 | உலக அல்சைமர் தினம் | மையக்கருத்து: முதுமை பற்றி கேளுங்கள், அல்சைமர் பற்றி கேளுங்கள் |
| செப்டம்பர் 23 | சர்வதேச சைகை மொழி தினம் | மையக்கருத்து: சைகை மொழி நம்மை ஒன்றிணைக்கிறது. |
| செப்டம்பர் 23 | ஆயுர்வேத நாள் | மையக்கருத்து: மக்கள் மற்றும் உலகத்திற்கான ஆயுர்வேதம் |
| செப்டம்பர் 25 | உலக மருந்தாளுநர் நாள் | மையக்கருத்து: ஆரோக்கியத்தைப் பற்றி சிந்தியுங்கள், மருந்தாளர்களைப் பற்றி சிந்தியுங்கள். |
| செப்டம்பர் 26 | உலக கடல்சார் தினம் | மையக்கருத்து: எதிர்காலத்தை வழிநடத்துதல், பாதுகாப்பு முதலில். |
| செப்டம்பர் 26 | உலக கருத்தடை தினம் | மையக்கருத்து: அனைவருக்கும் ஒரு தேர்வு, திட்டமிடுவதற்கு சுதந்திரம், தேர்வு செய்வதற்கான சக்தி. |
| செப்டம்பர் 26 | உலக சுற்றுச்சூழல் சுகாதார நாள் | மையக்கருத்து: சுத்தமான காற்று, ஆரோக்கியமான மக்கள். |
| செப்டம்பர் 27 | உலக சுற்றுலா நாள் | மையக்கருத்து: சுற்றுலா மற்றும் நிலையான மாற்றம் |
| செப்டம்பர் 28 | உலக வெறிநாய்க்கடி நோய் (ரேபிஸ்) தினம் | இந்த ஆண்டின் மையக்கருத்து: இப்போதே செயல்படுவோம், நீங்கள், நான், சமூகங்கள். |
| செப்டம்பர் 29 | உலக இதய நாள் | 2024 முதல் 20246 வரை, ‘செயலுக்கு இதயத்தைப் பயனபடுத்துங்கள்’ என்ற கருப்பொருளில் பிரச்சாரம் கவனம் செலுத்தும். |
| செப்டம்பர் 30 | சர்வதேச மொழிபெயர்ப்பு நாள் | கருப்பொருள்: மொழிபெயர்ப்பு, நீங்கள் நம்பக்கூடிய எதிர்காலத்தை வடிவமைத்தல். |

**COMBINED TECHNICAL SERVICES EXAMINATION (NON - INTERVIEW POSTS) - 04/08/2025 TO 10/08/2025 & 17/08/2025 AND 18/08/2025**

## Current affairs

## Awards

1. Match the Padma Shri Awardees, 2025 from the following with their respective field.

| | |
|---|---|
| A. Purisai Kannappa Sambandan | 1. Trade and Industry |
| B. R. Ashwin | 2. Sports |
| C. Seeni Viswanathan | 3. Literature and Education |
| D. R.G. Chandramogan | 4. Art |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 3 | 2 | 4 |
| b. | 2 | 1 | 3 | 4 |
| **c.** | **4** | **2** | **3** | **1** |
| d. | 4 | 2 | 1 | 3 |

e. Answer not known

பின்வருவனவற்றிலிருந்து 2025ம் ஆண்டிற்கான பத்ம ஸ்ரீ விருது பெற்றவர்களை அவர்களுடைய துறையோடு சரியாக பொருத்தவும்.

| | |
|---|---|
| A. புரிசை கண்ணப்ப சம்பந்தன் | 1. வர்த்தகம் மற்றும் தொழில் |
| B. R. அஸ்வின் | 2. விளையாட்டு |
| C. சீனி விஸ்வநாதன் | 3. இலக்கியம் மற்றும் கல்வி |
| D. R.G. சந்திரமோகன் | 4. கலை |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 3 | 2 | 4 |
| b. | 2 | 1 | 3 | 4 |
| c. | 4 | 2 | 3 | 1 |
| d. | 4 | 2 | 1 | 3 |

e. விடை தெரியவில்லை

## Eminent personalities and places in news

2. The Chancellor of Germany designate, Friedrich Merz belongs to

a. Nazi Party
b. Social Democratic Party
**c. Christian Democratic Union Party**
d. Communist Party
e. Answer not known

ஜெர்மனியின் புதிய அதிபராக விரைவில் பொறுப்பேற்கவுள்ள ஃப்ரெட்ரிக் மெர்ஸ் எக்கட்சியை சேர்ந்தவர்?

a. நாஜிக் கட்சி
b. சமூக ஜனநாயக கட்சி
c. கிருத்துவ ஜனநாயக ஐக்கிய கட்சி
d. கம்யூனிஸ்ட் கட்சி
e. விடை தெரியவில்லை

## GENERAL KNOWLEDGE

3. The United Nations General Assembly adopted the Declaration on the Rights of Persons belonging to National (or) Ethnic, Religious and Linguistic Minorities on

a. December 18, 1991
**b. December 18, 1992**
c. December 18, 1993
d. December 18, 1994
e. Answer not known

ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை தேசிய அல்லது இனம், மதம் மற்றும் மொழி சார்ந்த சிறுபான்மையினரின் உரிமைகள் குறித்த பிரகடனத்தை _____ அன்று ஏற்றுக்கொண்டது.

a. டிசம்பர் 18, 1991
b. டிசம்பர் 18, 1992
c. டிசம்பர் 18, 1993
d. டிசம்பர் 18, 1994
e. விடை தெரியவில்லை

APOLLO STUDY CENTRE